திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 07 சூலை–06

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி.வீரணன் | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம், பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| பல்கலைக்கழக உறுப்பினர் | |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 100
பகுதி : 07
சூலை 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | ரூ. |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்

இதழ்மணம் 628

நல்லாசிரியர் என்போர் . . . 630
முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி

தமிழில் நீதி இலக்கியம் 638
தமிழண்ணல்

'கேட்பிக்கும்' இடைச்சொற்கள் 644
முனைவர் பெ. சுயம்பு

வீரமாமுனிவரின் குறிப்பு வினை 658
சி. சொர்ண மாலா

குமரகுருபரரின் கற்பனையில் தமிழ் 660
உ. கருப்பத்தேவன்

# இதழ்மணம்

ஆசிரியர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தைப் பேராசிரியர் ம.சா. அறிவுடைநம்பி இந்தியக் குடியரசுத் தலைவருடைய பத்துக்கட்டளைகளை மேற்கோள் காட்டி எழுதியுள்ள கட்டுரை இடம்பெறுகிறது. மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்பறைகளிலும் பொதுவிடங்களிலும் கல்வி சார்ந்த முயற்சிகளில் காட்டுகின்ற நெறிமுறைகள் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அளவுகோள்; தொடக்கப்பள்ளி முதல் ஆய்வு மையங்கள் வரையுள்ள ஆசிரியரும் மாணவரும் உண்மையைத் தேடல் என்பதில் காட்டுகின்ற ஆர்வம்தான் ஒருநாடு. கல்வியாளர்கள் சிந்திக்க வேண்டிய செய்திகள் ஆசிரியருடைய கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அடுத்துப் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் "தமிழில் நீதி இலக்கியம்" என்னும் கட்டுரை அளித்துள்ளார்கள். தமிழும் தமிழரும் மாசுபடிந்து கிடப்பதை வருத்தத்தோடு பகிர்ந்து கொள்கிறார்கள்; கலைமக்கள் மாசு நீக்கத் தோன்றியது; அதுவே இன்று ஊடகங்கள் வழிமக்கள் மனத்தைத் தீய நெறிக்கு இட்டுச் செல்வதை யாரும் கண்டு கொள்ளாமல் வாணிகம் செய்வதை நினைந்து தன் சீற்றத்தை வெளியிட்டுள்ளார்கள். அறிவு உலகமும், மக்களும் மாசுபடுத்தும் வாணிப ஊடகங்களை எதிர்த்துப் போராடவேண்டிய கட்டாயம் இருப்பதை ஆசிரியர் எடுத்துரைக்கிறார். அப்போதுதான் இளைய தலைமுறையை உங்கள் குழந்தைகளை காப்பாற்ற முடியும். இடம், பொருள், ஏவல் மற்றும் எல்லாம் ஈட்டியும் என்ன பயன்? குழந்தைகள் செம்மாந்த அறநெறி நிற்காவிட்டால் குழந்தைகளுக்கு நீங்கள் ஈட்டும் செல்வம் எவ்வகையில் பயன்படும் என்பதை பெற்றோர் சிந்திக்க வேண்டும். குழந்தைகளுக்கு அறமும், அறிவும் நிறைந்த சூழலைக் காட்டுங்கள்; வன்முறைக் காட்சியும், பாலியல் காட்சியும் மனத்தைக் கெடுக்கும் என்பதை உணர்ந்து தமிழ்ச் சான்றோர் அண்ணல்

நெஞ்சம் நெக்குருகுவதைச் சிந்தியுங்கள்.

அடுத்துப் பேராசிரியர் முனைவர். பெ. சுயம்பு அவர்கள் 'கேட்பிக்கும்' இடைச்சொற்கள் என்னும் தலைப்பில் தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரைப்போக்கைச் சிந்தித்துச் செப்பம் செய்துள்ளார்கள். மாணவர்களும் ஆசிரியர்களும் படித்துப் பயன்பெற வேண்டிய கட்டுரை. இலக்கண, இலக்கியச் சிந்தனை வளாகம் ஒன்றைப் பேராசிரியர் சுயம்பு தம் மாணவர் குழாத்துடன் தொடர்ந்திருப்பதை அவருடைய மாணவி பேராசிரியர் சொர்ணமாலா வீரமாமுனிவரின் குறிப்புவினை என்னும் கட்டுரை உறுதி செய்கிறது. பேராசிரியர் சுயம்பு அவர்களும் இலக்கண இலக்கிய ஆர்வம் மிக்க மாணவர் பரம்பரைக்கும் வாழ்த்துக்கள்.

## மா. சங்கரபாண்டியனார் மறைவு

19.07.06 புதன்கிழமையன்று செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் *மா. சங்கரபாண்டியனார்* இயற்கை எய்தினார் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் சிறிது காலம் உடல் நலமின்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்கள். அவரைப் பிரிந்து வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கு தமிழ்ச்சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது. அப்பெரியார் சிறந்த வழக்கறிஞர்; பொது வாழ்வில் நீண்ட நெடிய தடம் பதித்தவர். அவருடைய இழப்பு தமிழ் உலகுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். செந்தமிழ்க் கல்லூரிக்கும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கும் பேரிழப்பாகும். அவர் இறைவன் திருவடி நிழலில் இன்புற இறைஞ்சுவோம்.

# நல்லாசிரியர் என்போர் . . .

முதுமுனைவர் **ம.சா. அறிவுடைநம்பி.**
தமிழ்ப் பேராசிரியர். சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி 605 014.

புதுதில்லியில் 2004ஆம் ஆண்டுக்கான 'ஆசிரியர்தின விருதுகள் வழங்கும் விழா' வில் இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் பங்கேற்று விருதுகளை வழங்கினார். அங்குக் குழுமியிருந்த ஆசிரியர்களிடம் 10 உறுதிமொழிகளைக் கூறி அவர்களை உறுதி ஏற்க வைத்தார். அவை வருமாறு

"(1) கல்வி கற்பித்தலை நேசிப்பேன், கற்பித்தலே எனது ஜீவன். (2) கல்வி கற்பித்தல் என்ற மாபெரும் அறப்பணிக்கு என்னை முற்றிலும் அர்பணிக்கிறேன். (3) சராசரி மாணவனை உயர்செயல்திறன் மிக்க மாணவனாக உயர்த்தினால் மட்டுமே என்னை நான் சிறந்த ஆசிரியராகக் கருதுவேன். (4) எனது வாழ்க்கையே எனது மாணவர்களுக்குச் செய்தியாக இருக்கும் வகையில் நான் வாழ்ந்து காட்டுவேன். (5) எதையும் ஆராய்ந்து அறியும் உணர்வையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில், மாணவர்களும், குழந்தைகளும் கேள்விகள் கேட்பதற்கு ஊக்கமளிப்பேன். (6) மத, இன, மொழி வேறுபாடின்றி மாணவர்கள் அனைவரையும் சமமாக நடத்துவேன். (7) மாணவர் களுக்குத் தரமான கல்வியைத் தருவதற்காகப் போதனா ஆற்றலைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்வேன். (8) சிறந்த சிந்தனைகளால் தொடர்ந்து எனது மனத்தை நிரப்புவேன். (9) மாணவர்கள் மத்தியில் உன்னதச் சிந்தனையை, செயல்பாட்டைப் பரப்புவேன். (10) எனது மாணவர்களின் வெற்றியை எப்போதும் கொண்டாடுவேன்."

குடியரசுத் தலைவரின் இந்த உறுதிமொழிகள் ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இச்சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு ஆசிரியரின் பங்களிப்பும் பொறுப்பும் மிக மிக இன்றியமையாததும் தேவையானதுமாகும் என்பதையே பேராசிரியர் கலாமின் உறுதிமொழிகள் காட்டுகின்றன.

இரண்டு பேர் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடச் சென்றனர். வழிபட்டுத் திரும்பும்பொழுது ஒருவன் மற்றொருவனிடம் 'நீ என்ன கடவுளிடம் வேண்டினாய்?' எனக் கேட்க, அவன் 'எனக்கு நல்ல புத்தியைக் கொடு' என்று வேண்டியதாகக் கூறினான். அதற்கு உடனே இரண்டாமவன் 'யார் யாரிடம் எதுஎது இல்லையோ அதைத்தானே இறைவனிடம் வேண்டிப் பெறுவது வழக்கம்' என்று கூறினானாம். வேடிக்கைக்காக இதைக் கூறினாலும் மேலே குடியரசுத் தலைவர் கூறிய உறுதிமொழிகளைப் படித்ததும் இந்த நிகழ்வுதான் நினைவுக்கு வந்தது. இக்காலத்துக்கும் ஏன் எக்காலத்துக்கும் பேராசிரியர் கலாமின் பத்து உறுதிமொழிகள் பொருத்தப்பாடுடையனவாகத் திகழ்கின்றன. இப்பொழுதிருக்கின்ற ஆசிரியர் சமுதாயம் மனச்சான்றுடன் எண்ணிப் பார்க்கட்டும். பேராசிரியர் கலாம் கூறிய உறுதிமொழிகளின்படி எத்தனை விழுக்காட்டு ஆசிரியர்கள் நடந்து கொண்டு வருகின்றார்கள்? எவையெல்லாம் ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஆசிரியர் சமுதாயம் இன்றைக்குத் திசை மாறிய பறவைகளாய்ச் செல்வதைத்தானே பேராசிரியர் கலாமின் உறுதிமொழிகள் நமக்குக் காட்டுகின்றன.

கல்வி சிறந்த தமிழ்நாட்டில், புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாட்டில் அறிஞர்கள், படித்தவர்கள், புத்திசாலிகள், அறிவியல் வல்லுநர்கள் போன்றோர் நிறைந்திருக்கின்றனர். இன்றைய அரசியல் . சமுதாய அமைப்புகள் கல்வித்துறையிலும் ஊடுருவி அதன் அமைப்பைக் கெடுத்து விடுகின்றன. 'அரசியல் இல்லாத துறையே இல்லை' என்று சொல்லும் அளவிற்கு அரசியலின் செல்வாக்கு அனைத்துத் துறைகளிலும் இழையோடி நன்கு செழித்து வளர்ந்திருக்கிறது. இந்த அரசியல் ஆசிரியர்களையும் விட்டு வைக்கவில்லை.

ஆனால் ஆசிரியர்கள் நேர்மையானவர்களாக, அடிப்படையில் உண்மையானவர்களாக, யோக்கியமானவர்களாக, கண்ணியம் மிக்கவர்களாக, கடமை தவறாதவர்களாக தன்னலம் கருதாதவர்களாக இருந்தால் எந்தவொரு அரசியலும் அவர்களை ஒருநாளும் கெடுத்துவிட முடியாது. நேர்மையைப்

புறக்கணிப்பவர்களாக இருக்கும் பொழுது, பதவி ஆசை புகழாசை கொண்டு அதிகாரத்தால் அவர்கள் சபலசித்தம் உடையவர்களாக மாறும் போது தான் அரசியல் அவர்களைக் கெடுத்துவிடுகிறது.

இன்றைக்கு ஆசிரியர்களிடையே ஒற்றுமையில்லை. அவர்களுக்குள்ளேயே தேவையற்ற போட்டிகளும் பொறாமைகளும் ஏற்பட்டுள்ளன. ஆசிரியர்களிடையே பல சங்கங்கள், சாதிச் சங்கங்கள், பல தலைவர்கள் என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆசிரியராக இருக்கட்டும், ஆசிரியர் சங்கத் தலைவராக இருக்கட்டும், துறைத்தலைவராக இருக்கட்டும், அவர் எந்தப் பதவியில் வேண்டுமானாலும் இருக்கட்டும். தலைவன் என்பவன் அவனை நம்புகிறவர்களுக்குரிய நம்பிக்கைப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு சங்கத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்போது, அவன் நல்லவனா, நேர்மை உள்ளம் படைத்தவனா, தனி மனித உயிரையும் உடைமையையும் அக்கறையுடன் காப்பவனா, அல்லது சந்தர்ப்பவாதியா, பதவியால் இழுத்துக் கொள்ளப்படுபவனா, ஆசிரிய சமுதாயத்துக்குத் துரோகம் இழைப்பவனா என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

நிரந்தரப் பயனைப் பெறுவதற்காகத் தற்காலிகமாகக் கிடைக்கும் இன்பத்தைப் பொறுமையாகத் தியாகம் செய்கின்ற தலைவர் எவரோ அவரே சிறந்த பண்பாளராகத் திகழ்வார்.

தமிழை வளர்ப்பதற்கு நான்கு சங்கங்கள் இருந்தன என்பதை நாம் தமிழ் இலக்கிய வரலாற்றில் படித்து வருகின்றோம். ஆனால் இன்றைக்குப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் சங்கம் இல்லாத கல்வி நிறுவனமே இல்லை எனும் அளவிற்கு ஏராளமாகப் பல்கிப் பெருகியுள்ளன. இன்றைக்கு இருக்கின்ற இத்தகைய ஆசிரியர் சங்கத் தலைவர்களின் நிலை என்ன என்பதையும் ஆராய வேண்டும். தலைவர் வழிபாடு (Hero Worship) என்பது இன்றைக்கு மிகுந்த அளவில் உள்ளது. இதன் மயக்கத்தில் பல தலைவர்கள் தங்கள் நிலையை மறந்து நெறி தவறிச் சென்றதும்

உண்டு. இதன் பலன் என்னவெனில் அத்தலைவர்களுக்குச் சிக்கல் வந்தபோது அவர்களால் பலனடைந்த எவரும் எந்தவொரு உதவியையும் அவர்களுக்குச் செய்ய முடியாமல் போனதுதான் உண்மை.

'அவரவர் செய்த பாவம் அடுத்த பிறவியில்' என்பதெல்லாம் பழங்கதை. 'அவன் செய்த நல்வினை தீவினை எல்லாம் இப்பிறப்பிலேயே அவன் ஆண்டு அனுபவித்து விடுவதுதான்' இன்றைக்கு நாம் காணும் உண்மையாகும். கடமை தவறாமல் கண்ணியத்துடன் பொறுமையுடன் பேராசிரியர் கலாம் கூறிய உறுதிமொழிகளின்படி நடந்த ஆசிரியர்களுக்கு அதற்குரிய பலன்களும் கிடைத்தன என்பதும் உண்மை. சிலருக்கு உடனே கிடைக்கவில்லை சிறிது காலம் கடந்து கிடைத்தன.

உண்மை, உழைப்பு, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவை என்றென்றைக்கும் மனிதனை மனிதனாக வாழ வைக்கும். உடனடிப்பலன் இல்லாவிட்டாலும் என்றேனும் ஒருநாள் கண்டிப்பாக இதற்குரிய பலன் கிடைக்கும் என்பது திண்ணம். அதனால்தான் நம் முன்னோர் 'தருமம் மறுபடியும் வெல்லும்', 'தெய்வம் நின்று கொல்லும்', 'சத்தியம் வெற்றி பெறச் சில நாளாகும்' என்றெல்லாம் சொல்லி வைத்தனர் போலும்!

> "முயற்சி திருவினையாக்கும், பணியுமாம் என்றும் பெருமை சாதிகள் இல்லையடி பாப்பா, மறந்தும் பிறன் கேடு சூழற்க, பயனுடைய சொல்லைச் சொல்லுக, ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும், உழைப்பே வெற்றிக்கு அடிப்படை, நம்பிக்கைதான் எதிர்காலத்தை உருவாக்குகிறது, பெருமையும் சிறுமையும் தான்தர வருமே, பூமியைப் போலப் பொறுமை வேண்டும், தன்னம்பிக்கைதான் வெற்றிப் பாதையின் முதல் படிக்கட்டு, மனசாட்சியே மிகச்சிறந்த வழிகாட்டி, எப்பொழுதும் நல்லதையே நினை, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், ஒன்றே குலம் ஒருவனே தேவன், நல்லதும் கெட்டதும் நாக்குல இருக்கு, கவலையை விட மிகக் கொடியது சந்தேகம்"

என்றெல்லாம் மாணவர்களுக்கு ஆசிரியர் சொல்லிக் கொடுத்தால்மட்டும் போதாது. "தாமும் வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடித்துத் தம் வாழ்க்கை மாணவ சமுதாயத்துக்கு மட்டுமல்ல தமிழ்ச் சமுதாயத்திற்கே சிறந்த வழிகாட்டியாக முன்மாதிரியாகத் திகழ வேண்டும்" என்ற மன உறுதியை ஒவ்வொரு ஆசிரியரும் இந்நாளில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

"பாடம் நடத்துவதும், பிறருக்கு அறவுரையும் அறிவுரையும் *கூறுவதுதான் ஆசிரியர் கடமை" என்று எண்ணிவிடுதல் கூடாது.* 'சாதிகள் இல்லை' என்று சொன்னால் மட்டும் போதாது. 'சாதிகள் பார்க்காமல் அனைவரும் சமம்' என்ற நிலையில் மனிதனாக மனிதநேயம் மிக்கவனாக நடந்து கொள்ள வேண்டும். பகை, பழி வாங்கும் போக்கு முதலானவற்றைக் கைவிட்டு விட்டு மனித நேயம், உயிர் நேயம் கொண்டு ஆசிரியர் ஒவ்வொருவரும் நடந்து கொண்டால் தமிழ்ச் சமுதாயத்தை உலக அரங்கில் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

இவற்றையெல்லாம் கண்ட இன்றைய புதுக்கவிஞர் ஒருவர் இப்படிப் பாடுகின்றார் :

"பஞ்சாயத்துப் போர்டில் உறுப்பினரானார் / பஞ்சாயத்துத் தலைவர் ஆனார் / மாவட்டத் தலைவரானார் / எம்.எல்.ஏ. ஆனார் / அடுத்து நடைபெற்ற / நாடாளுமன்றத் தேர்தலில் / வெற்றி பெற்று எம்.பி. ஆனார் / மத்திய அமைச்சரவையில் மந்திரியுமானார் / ஆனால் **அவர் கடைசிவரை / மனிதன் ஆகாமலே / மரித்துப் போனார்."**

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும் சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்" என்பது தொல்காப்பியம். "மக்களின் ஒழுகலாறுகளைக் கூறுகின்ற அகன் ஐந்திணைப் பாடல்களில் இயற்பெயரைச் சுட்டி, ஒருவரும் தம் பெயரைக் கூறுவது மரபில்லை" என்பது இதற்குரிய பொருளாகும். இந்த நூற்பாவில் சொல்லப்பட்ட ஒழுக்கம் இக்காலத்தில் பல்வேறு துறைகளிலும் அப்படியே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதாவது தங்கள் பெயரைக் கூறாமல் இயற்பெயரை வெளியிடாமல் மேலிடத்திற்குப் *பல கடிதங்களை* அனுப்பும் மரபு இருந்து வருகிறது. அதிலும் ஆசிரிய சமுதாயத்தில் ஓர் ஆசிரியரைப் பற்றிப் பொறாமை

கொண்டு மற்றோர் ஆசிரியர் மேலிடத்திற்குச் சுட்டி அவர் பெயரைக் குறிப்பிடாமல் அதாவது 'மொட்டைக் கடிதம்' (ananymous letter) எழுதும் மரபு இருந்து வருவது வெட்கப்படக்கூடியது. சமுதாயச் சீர்கேட்டுக்கு இது எந்த அளவிற்கு வழி வகுக்கிறது என்பதை உணர்ந்து இனியாவது இப்போக்கை ஆசிரியர்களும் சரி பிற துறை சார்ந்தவர்களும் சரி விட்டு விடுவது சமுதாயத்திற்கு நன்மை பயக்கும். சொல்ல வருகின்ற கருத்தை 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று துணிந்து சொல்ல வேண்டும். பயப்படாமல் துணிந்து செயல்படவேண்டும். பயத்தை விட்டொழிப்பது நன்று.

"நாவலர் பாரதியாரின் மாணவர், நாட்டாரின் மாணவர், தெ.பொ.மீ.யின் மாணவர், மு.வ. வின் மாணவர், ஏ.சி. செட்டியாரின் மாணவர்" என்று கூறிவந்த நிலை மாறியதன் காரணத்தை ஆசிரியர்கள் சற்றேனும் எண்ணிப் பார்க்க வேண்டும். சரியான பரம்பரையை உருவாக்குவதில் ஆசிரியர்கள் தங்கள் கடமையை மறந்த நிலையையே பேராசிரியர் கலாமின் உறுதிமொழிகள் என்னை எண்ணிப் பார்க்கத் தூண்டின.

பத்து என்பதில் வரலாற்றுரீதியில் பார்த்தோமானால் அதற்கு ஒரு மதிப்பு இருப்பதை அறியலாம். பத்துப் பத்தாகப் பாடும் மரபு தமிழ் இலக்கியத்தில் பல நிலைகளில் காணப்படுகிறது. இயேசுநாதரும் தம் சீடர்களுக்குப் பத்துக் கட்டளைகளை வழங்கினார். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தானோ பேராசிரியர் கலாம் அவர்கள் பத்து உறுதிமொழிகளை எடுக்கச் செய்தார் போலும்

'நானும் ஆசிரியர் சமூகத்தைச் சேர்ந்தவன்தான்' என்று பேராசிரியர் கலாம் ஆசிரியர் திருவிழாவில் பெருமையுடன் கூறினார். இன்றைக்கு இந்திய நாட்டின் தலைமை அமைச்சராக இருந்து வருகின்ற டாக்டர் மன்மோகன்சிங் அவர்களும் ஆசிரியர் சமூகத்தைச் சேர்ந்தவர்தான்.

மேலும் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவதற்குக் காரண கர்த்தாவாக விளங்கும் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் ஓர் ஆசிரியர்தான். இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்து அறிவு சான்ற மேதையாகவும், சிறந்த தத்துவஞானியாகவும் திகழ்ந்தவர்.

சிறந்த நாட்டுப்பற்று மிக்குடைய இவர் மாணவப் பருவத்திலேயே பிற மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தரும் ஆசிரியராக விளங்கினார். எப்பொழுதும் நூல்களைப் படிக்கும் பழக்கமுள்ளவர். 'தாகூருடைய சமயக் கருத்துக்கள்' எனும் அரியதொரு ஆய்வு நூலை எழுதி வெளியிட்டார். இந்நூலைப் படித்த தாகூர், "என்னுடன் நெருங்கிப் பழகாது என் நூல்களை படித்தே என் கருத்துக்களை உள்ளவாறு உணர்ந்து வெளிப்படுத்திய உங்கள் பேரறிவு பாராட்டத்தக்கது. வேறு எவரும் என்னை உள்ளவாறு உணர்ந்தவர் இல்லை" என்று பாராட்டிக் கடிதம் எழுதினார்.

ஓர் ஆசிரியரைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவர் எழுதிய நூல்களைக் கொண்டே அவ்வாசிரியரைப்பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்பதற்குத் தாகூரின் பாராட்டுக் கடிதம் சிறந்த சான்றாகும்.

ஒருசில ஆசிரியர்களின் தவறான நடவடிக்கைகளால் ஆசிரியர் சமுதாயத்தையே எடை போட்டுவிட முடியுமா? என்ற கேள்வி எழுந்தது. 'ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு' கலந்தால் என்னவாகும்? அதைப்போன்றதுதான் இதுவும். சமுதாயத்தில் மிகவும் மதித்துப் போற்றத்தக்க நிலையில் ஆசிரியர் சமுதாயம் திகழவேண்டும் என்ற ஆதங்கம்தான் இதை எழுத நேர்ந்தது. சரியான முறையில் பாதையில் ஆசிரியர் சமுதாயம் செல்லவில்லையானால் "*உங்களைவிடத் திறமையில்* குறைந்தவர்கள் உங்களுக்காக முடிவெடுப்பார்கள். அதன் பலனை நீங்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும்" என்று பால்தேயர் கூறியதை இவண் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒருவரையொருவர் மதிக்கும் உறவு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை, அன்பினால் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் நிலை போன்றவை இன்று ஆசிரியர்களுக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்றன.

*தான் என்ற அகந்தை* இல்லாமல், *தனக்குத்தான் எல்லாம்* தெரியும் அவனுக்கென்ன தெரியும். நான் தான் பெரியவன் அவன் *என்ன என்னைவிடப் பெரியவனா என்ற தன்முனைப்பை விட்டுவிட* வேண்டும். ஒரு பேராசிரியரது கருத்திற்கு மக்கள் செவிமடுக்கும் நிலையை உருவாக்க வேண்டும்.

> "உன்னைச் சூழ உள்ளோர் நெறி தவறி, தமது தவற்றுக்கு நீதான் காரணம் என்றபோதும் உன்னால் நேர்மையாக நடக்க முடியுமானால், மற்றவன் உன்மீது நம்பிக்கை இழந்தபோதும் உன்னால் தன்னம்பிக்கை இழக்காமல் இருக்க முடியுமானால், சமயம் வாய்க்கும் வரை காத்திருப்பதால் அலுத்துக் கொள்ளாமல் இருக்க முடியுமானால், உன்னைப் பற்றிய பொய்ச் செய்திகள் உலவும்போதும் உன்னால் பொய் வழியில் செல்லாதிருக்க முடியுமானால், உன்னைப் பிறர் வெறுக்கும் போதும் வெறுப்புக்கு இடம் கொடுக்காமல் இருக்க முடியுமானால், பாமரர்களோடு வாழ்ந்தும் நற்பண்புகளை நழுவவிடாமல் இருக்க முடியுமானால்,, தம்பி, இந்த வையகமும் இதிலுள்ள யாவும் உன்னுடையதுதான். அவ்வளவு ஏன்? நீ ஒரு மனிதன்"

என்று ருட்யார்டு கிப்ளிங் என்ற அறிஞர் கூறுவது போல மனிதனாக, மனித நேயம் மிக்கவராக, சூழ்நிலையை வெல்லும் தன்மை உடையவராக, உயிர் நேயம் மிக்கவராக இருப்பவரே சிறந்ததொரு நல்லாசிரியராக விளங்க முடியும்.

# தமிழில் நீதி இலக்கியம்

*தமிழண்ணல்*

படைப்பு எனப்படும் இலக்கியமும் மக்களை இன்புறுத்தும் கலைகளும் மாந்தரினத்தைச் சிறிதளவேனும் முன்னேற்ற வேண்டும். அதுவே படைப்பறம், கலையறமாகும்.

மக்கள் மனம் மாசுபடரும் இயல்புடையது. அது அதன் பிறவி இயற்கை.

வீட்டில் குப்பை குவிவது, புழுதி படிவது, தூசி படர்வது இயற்கையாக நடப்பதேயாம். நாளும் வீட்டைத் துப்புரவு செய்ய வேண்டும்; செய்கின்றோம்.

உடலில் அழுக்குப் படிவது, வியர்வை நாற்றம் ஏற்படுவது அதன் இயற்கையாகும். அதனால் நாள்தோறும் குளித்து, நம் உடலைத் தூய்மை செய்து கொள்கிறோம். 'புறந்தூய்மை நீரான் அமையும்' என்பார் திருவள்ளுவர். உடல் புறத் தோற்றமும் நீரினால் கழுவப்பட்டு, நாளும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பது கருத்து.

இவ்வாறே வீடும் உடலும் போல நம் உள்ளத்திலும் மாசு படிந்துகொண்டே இருக்கிறது.

இன்று சுற்றுச்சூழல் மாசுத் தடுப்புப் பற்றி நிரம்பப் பேசப்படுகின்றன; எழுதப்படுகின்றன. இவற்றுக்கான இயக்கங்கள் கூட உள்ளன.

ஆனால் மனத்தை மாசுபடுத்தும், சுற்றுச்சூழல் மாசுத் தடுப்பு வாரியங்கள் பற்றி பலரும் பேசுவதில்லை. இன்றைய ஊடகங்கள் மனமாசு பரப்பும் கழிவு நீர்க் கொள்கலங்களாக, கெட்ட நாற்றத்தைப் பரப்பும் குப்பை மேடுகளாகப் பல்கிப் பெருகி வருகின்றன.

மக்கள் மனம் மரத்துப் போயிற்று. கொலை, களவு, காமம், கள்வெறி தலைவிரித்தாடுகின்றன. இந்நிலையில், மன மாசு கழுவவேண்டிய மனத்தைத் தூய்மைப் படுத்தவேண்டிய கலைகள் – திரைப்படம், சின்னத்திரை, தாளிகைகள் எல்லாம் அதற்கு எதிராக, மனிதனை விலங்குகளாக மாற்றி வருகின்றன.

நான்கு வகைப் பாக்களையும் பற்றிக் கூறியதும் தொல்காப்பியர் என்ன சொன்னார்?

அந்நிலை மருங்கின் அறம்முத லாகிய
மும் முதற் பொருட்கும் உரிய என்ப (1363)

என்றார். அறத்தைப் பேணுக. இன்று 'பத்திரிக்கை தருமம்' என்பது போல, படைப்பறம் பேணுக. அறவழியிலேயே உலகியலையும், இன்பத்தையும் படைக்க என்பது கருத்து.

இதுவே அறநூல்களின் தோற்றத்திற்குக் காரணம். அவை பாடலாக இருக்கலாம்; சிறு கதைகளாக இருக்கலாம்; காப்பியங்களாக இருக்கலாம்; திரைப்படமாக இருக்கலாம்; இனிய இசைப்பாடலாக இருக்கலாம்.

எதுவாக இருந்தாலும், மனமாசு கழுவப் பயன்படவேண்டும். மனத்தில் மாசு படிவது உலகச் சூழலால் நடக்கும் ஓர் இயல்பு நிகழ்ச்சி. அதைக் கழுவப் பயன்படுவன இரண்டு. அவை மருந்து போல்வன; தான் செய் நோய்க்குத் தான் மருந்தாகும் தேன் போல்வன.

ஒன்று – அறநூல்கள்
இரண்டு – இறைவழிபாடு

இவை இரண்டும் மனத்தைத் தூய்மைப் படுத்தப் பயன்பட வேண்டும். இறைவழிபாடு, பாடிப்பரவுதல், மனஓர்மை (தியானம்). அதனை ஒரு மனப் பயிற்சி எனலாம். நம் உடலைத் திடப்படுத்துவது, உடற்பயிற்சி; மனவலிமை தருவது, மனப் பயிற்சிதருவது வழிபாடு.

அறநூல் மனத்தை மாசகற்றித் தூய்மைப்படுத்தும்; வழிபாடு அந்த மனத்திற்கு ஒரு பயிற்சி தந்து வலிமைப்படுத்தும்.

இன்று மனத்தை வலிமைப் படுத்த வேண்டிய மனப்பயிற்சி தரவேண்டிய, அவரவர் தாம்தாம் பாடிப் பரவிப் பயிலவேண்டிய இடத்தில் பூசாரியர் எனச் சிலர் புகுந்து, இடைத்தரகாய் நின்று அதை முற்றிலும் கெடுத்து விடுகின்றனர். ஒருவனுக்காக மற்றொருவன் உடற்பயிற்சி செய்தால் இவன் உடல் வலிமை பெறுமா? நம் கோயில் வழிபாடுகள் முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும். காசிநகரிற்போல அவரவர் வழிபட வேண்டும்.

மன மாசு அகற்றும் இந்த இரண்டில் அறநூல்களாகிய - நீதி நூல்களுக்குத் தமிழில் தனி வரலாறே உண்டு. தமிழுக்கு ஒரு தனிச் சிறப்பு வரலாறு தெரிந்த இந்த மூவாயிரம் ஆண்டில் தனித்தனி வரலாறு எழுதுமளவு இலக்கியம், இலக்கணம், நீதிநூல், மெய்ம்மையியல், மருத்துவம், வானியல், கலைகள் (இசை, நாட்டியம், நாடகம்) ஆகியவற்றுக்குக் காலந்தோறும் நூல்கள் தோன்றின. தமிழில் அறஇலக்கிய வரலாறு - என ஒரு பெரிய கலைக் களஞ்சியமே தொகுக்கலாம். அற இலக்கியக் கலைச் சொற்கள் எனவும் தொகுக்க வாய்ப்புளது.

## தமிழில் அற இலக்கியத் தோற்றம்

சங்க கால அகப்பாடல்களில் 'அறத்தொடு நிலை' என ஒன்றுண்டு. ஓர் இளம்பெண் காதலித்தவனையே தன் மணாளனாக ஏற்கவேண்டும். அதுவே கற்புடைமை - மனத்திண்மை - ஒருமை - மாறாது நிலைபெறும் பெருமை. இதனைத் தாயர்க்கு அறிவிப்பது பற்றிய ஒரு கூற்றிற்கு அறத்தொடு நிலை எனப் பெயரிட்டுள்ளனர். அதுவே அறமாதலின் இக் 'கலைச்சொல்' (அக இலக்கியக் கலைச்சொல்) எத்துணைத் திட்ப நுட்ப முடையதென எண்ணிப் பார்க்க வேண்டும்.

புறத்திணையிலும் 'தழிஞ்சி' என ஒன்றுளது. இத்துறை பற்றி, புறப்பொருள் வெண்பா மாலையில், 'அழியுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக் கழிதறுகண்மை' (வஞ்சி 20) என்று

விளக்கப்படுகிறது. இஃது ஒரு போர் அறம். போர்க்களத்தில் புறங்காட்டி ஓடுபவனை விரட்டிப்போய்க் கொல்லக் கூடாது தன் எதிரே ஆயுதத்தை இழந்து தற்காப்பு இன்றி நிற்பவனைத்தன் ஆயுதங் கொண்டு கொல்லுதல் தவறு தன் கையில் வாள் இருக்க எதிரி கை வாள் ஒடிந்து விழுந்துவிடின் அவனுக்கு மற்றொரு வாளைக் கொடுத்தே போர் செய்ய வேண்டும். சமநிலையில் நின்று வெல்வதே வெற்றி என்று கருதிய காலம் அது. தழிஞ்சி – எதிரியையும் தழுவிப் போகும் இம் மனநிலைவளரின், மனிதன் விலங்குநிலையினின்றும் மேம்பட்டவனாகின்றான். இதனை அறத்தைத் தழுவிப் போவதாகவும் கொள்ளலாம்.

மேலும் தொல்காப்பியத்தில் வரும் பல்வேறு துறைகளே, அறநூல்களுக்கு வித்திட்டன. செவியறிவுறூஉ வாயுறை என இரண்டு வாழ்த்துக்கள் பாடாண்திணையில் வரும். செவியுறிவுறூஉ – செவிக்கண் அறத்தை அறுவுறுத்தல். இவ்வாறு கூறி வாழ்த்துவதை செவியுறை வாழ்த்து என்றும் கூறுவர்.

செருக்குக் கொள்ளாதே; பெரியவர்களுக்குப் பணிந்துபோ என்று செவிக்கண் அறிவுறுத்துவது செவியுறை.

வேம்பும் கடுவும் (கடுக்காய்) போல், கடுஞ்சொற்கூறி, பிற்பாடு நன்மை பார்க்குமென்று, முன்கூட்டி எச்சரிப்பது கருதி, தயக்கமின்றிக் கடிந்து அறிவுரை கூறுவது வாயுறை வாழ்த்து.

உறை என்பதற்கு மருந்து என்று பொருளுண்டு. இவை அறிவுக்கும் மனத்திற்கும் பயன்படுவன வாதலின் செவியுறை, வாயுறை எனப்பட்டன என்பார் பேராசிரியர். பிற்காலத்தில் பதினெண் கீழ்க் கணக்கில் மருந்தின் பெயரால் பல அற நூல்கள் தோன்ற இவையே வழிவகுத்தன.

சுக்கு, மிளகு, திப்பிலி தோன்ற இவையே வழிவகுத்தன. அதுபோல் ஒரு பாடலில் மூன்று மருந்து போன்ற மூன்று அறக்கருத்துகளை அடுக்கிக் கூறும் நூல் திரிகடுகம் சிறுபஞ்சமூலம் என்பதும் ஒரு சித்த மருத்துவ மருந்து. சமணர்கள் மருத்துவத்தில்

சிறந்து விளங்கினர். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்களால் ஆன மருந்து, உடல்நோயைப் போக்கும். அதுபோல ஐந்தைந்து அறங்களைக் கூறி மக்கள் துயரை நீக்குவது சிறுபஞ்ச மூலம் என்ற அறநூல். இதுபோல ஏலாதியும் ஒரு மருந்து ஆறு மருந்துச் சரக்குகள் கொண்டது. (ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு) இவைபோல் ஆறு அறங்களை ஒரு பாடலில் அடுக்கிக் கூறுவது ஏலாதி.

அறநூல் வரலாற்றில் 'திருக்குறளுக்கு' நிகரான ஒன்று தமிழிலும் இல்லை பிற மொழியிலும் இல்லை.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப (1434)

எனும் தொல்காப்பியம் வாய்மொழி, மந்திரம் என்றும் மறை மொழி என்றும் கூறுவன, சான்றோர் கூறிய அறநூல்களையே. பிறவாறு மூடநம்பிக்கை வயப்பட்ட மந்திரமன்று இது. திருமூலர் எழுதிய திருமந்திரமும் இதற்குச் சான்று. பிறபல மந்திர தந்திரம் பற்றிக் கூறுவனவும், இதன்வழிப்பட்டனவே.

திருக்குறளுக்குப்பின் தோன்றியவை பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள பதினொரு நீதி நூல்கள். அவற்றில் திருக்குறள் நீங்கலாகப் பத்து நூல்கள், சங்கம் மருவிய காலத்தன.

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இனியவை நாற்பது
4. இன்னாநாற்பது
5. திரிகடுகம்
6. ஆசாரக் கோவை
7. பழமொழிநானூறு
8. சிறுபஞ்சமூலம்
9. முதுமொழிக் காஞ்சி
10. ஏலாதி

இவற்றுடன் பிற்காலத்தெனச் சிலர் கருதும் இன்னிலை – என்ற நூலையும் சேர்த்துக் கூறுவதுண்டு.

இவற்றுள் நாலடியார் நானூறு வெண்பாக்கள் கொண்டது. திருக்குறளுக்கு அடுத்த சிறப்புடையது. 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்பர். நான்கு – நாலடியார், இரண்டு–திருக்குறள்.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பது பழமொழி.

இடைக்காலத்தில் கணக்கற்ற நீதிநூல்கள் தோன்றின. சித்தர் பாடல்கள் பல மெய்யியல் போக்கில் அறம் போதிப்பனவே. பிற்காலத்தும் இக்காலத்தும் தோன்றிய நீதி நூல்களை, நீங்கள் இலக்கிய வரலாற்றில் மிக விரிவாகப் படிக்கலாம்.

தனிப் பாடல் திரட்டில் காணப்படும் நீதிகள் மிகப்பலவாகும். அவை யாவும் செவிவழிச்செய்திகளையும் வரலாறுகளையும் உணர்த்துபவை. பழமொழி நானூறு நாலடியாருக்கு அடுத்து மிகச்சிறந்த நூல் அதுவும் பற்பல வரலாறுகளை – வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறி, ஒவ்வொரு பழமொழிக்கும் ஓர் உதாரணம் காட்டி அமைவன. அதிவீரராம பாண்டியரின் நறுந்தொகை படிக்கப்படிக்க இனிமை தருவது.

குமரகுருபரர், சிவப்பிரகாசர், வேதநாயகம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் வரை தமிழ் நீதிநூல் வரலாறு நீள்கிறது.

எத்தனை நீதிநூல்கள் பிற்காலத்தில் தோன்றினாலும், ஔவையின் நீதிநூல்களே பெரும்புகழ் பெற்றுள்ளன. திருவள்ளுவர் ஒன்றேமுக்காலடியில் அறங்கூற முடியும் எனப் புதிய சோதனை முயற்சியில் ஈடுபட்டு, இறவாப் புகழ்பெற்றார்.

ஔவையார் ஓரடியிலும் (கொன்றைவேந்தன்), அரைஅடியிலும் (ஆத்திசூடி) அறம் சொல்ல முடியும் எனத் தாமும் ஒரு புதிய சோதனை முயற்சியில் ஈடுபட்டுப் பெரும் புகழ் பெற்றார். மேலும் தமிழ் எழுத்துக்களை அதன் வரிசைப்படி வைத்து நீதி போதித்ததும் அவரின் தனிச் சிறப்பாகும்.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் – எனப் பேரறிஞர் மு. வரதராசனார் ஒரு நூல் எழுதினார். அதாவது அது வெறும் அறநூலன்று; அன்றாட வாழ்வு நூல்–நம் வாழ்வுக்கு வழிகாட்டி என்பது கருத்து. தமிழ் மரபில் தோன்றிய அறநூல்கள் அனைத்தும் இதைப் பின்பற்றி அறநூல்களை அன்றாட வாழ்வியல் நூல்களாகவே படைத்தன.

*(தொடரும்)*

# ‘கேட்பிக்கும்’ இடைச்சொற்கள்

முனைவர் *பெ. சுயம்பு*
தமிழ் இணைப் பேராசிரியர்
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்

*இடைச்சொற்கள்*

இலக்கண விவரிப்பில் நூல்கள் பெயர்ச் சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இணையான இடத்தினை இடைச் சொற்களுக்குத் தரவில்லை. ‘சொல் எனப்படுப பெயரே வினை என்று ஆயிரண்டு என்ப’ (தொல்காப்பியம்) என்று பெயரையும் வினையையுமே சொல்லின் வகைகள் என்று சிறப்பித்து இலக்கண நூல்கள் கூறுகின்றன. இடைச் சொற்கள் அவ்விருவகைச் சொற்களைச் சார்ந்தும் அவற்றிற்கு உறுப்பாகவும் அமையவல்ல சார்புச் சொற்களே என்ற எண்ணமே, இடைச் சொற்களைப் பெயர், வினைகளுக்கு இணையாக நூல்கள் கருதாததற்குக் காரணமாகும். எனினும், மொழியமைப்பிலும் பயன்பாட்டிலும் இடைச்சொற்களின் பணி இணையில்லாதது எனலாம். பெயர், வினைப் பகுதிகளை அடுத்து இணைந்து, பல்வேறு வகையான சொல்வகைகளை உருவாக்குதல், தொடர் அமைப்புக்களையும் உறவுகளையும் உருவாக்குதல், மாந்தரின் உணர்ச்சிகளைச் சொற்களுடன் இணைத்து, உயிரோட்டமுள்ளதாக மொழியமைப்பினை மெருகேற்றுதல் போன்ற பணிகள் யாவும் இடைச்சொற்களாலேயே செய்யப்படுகின்றன.

தமிழ் இலக்கண நூல்கள் இடைச் சொற்களைத் தொகுத்து, சில வகைகளாக்கி விவரிக்கின்றன. அவற்றுள் ‘குறிப்பில் பொருள்’ உணர்த்துவன ஒர் வகையாகும். இவ்வகைச் சொற்கள் பேசுவோரின் உணர்ச்சிகளைக் கேட்பவர், பேசப்படும் செய்தி, சூழல் ஆகியவற்றை ஒட்டி, முன்னும் பின்னும் வருகிற சொற்களைச் சார்ந்து வெளிப்படுத்துகின்றன. இத்தகைய

சொற்களுள் 'கேட்பிக்கும்' இடைச்சொற்களும் (Particles of Addressing) ஓர் வகையாகும்.

பேசுவோர் கேட்பவரின் கவனத்தைத் தம்பால் ஈர்க்கும் நோக்கில் கேட்பிக்கும் இடைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை பெரும்பான்மையும் உரையாடலில் முதற்சொல்லாக வருகின்றன.

கேட்பிக்கும் இடைச்சொற்கள் பொருள் இழப்புற்ற முறைப் பெயர்களாகவும் ஒட்டுச் சொற்களாகவும் காணப்படுகின்றன.

தொல்காப்பியம்,

'அம்ம கேட்பிக்கும்' என்றும் —— சொல்.272
'அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும் ———— 150
விளியொடு கொள்ப தெளியு மோரே' என்றும்

கூறும் இரு நூற்பாக்களும் கேட்பிக்கும் இடைச்சொல் தொடர்பானவையாகும். அம்ம என்னும் இடைச்சொல் வடிவம் மாற்றமின்றியும் அம்மா என்று வடிவமாற்றத்தோடும் கேட்பித்தலாகிய பொருளில் வருதலை இந்நூற்பாக்கள் தெரிவிக்கின்றன. இதற்கு உரையாசிரியர்கள் 'அம்ம வாழி தோழி, அம்மா கொற்றா' என்பவற்றைச் சான்றாக எடுத்துரைக்கின்றனர்.

அம்ம என்னும் சொல் உரையாடலில் முதற்கண் வருமிடத்துக் கேட்பித்தல் பொருளில் வருகிறது. ஆனால் இச்சொல் பிற இடங்களில் 'உண்டாலம்ம இவ்வுலகம்', 'செந்தாழம்பூவில் வந்தாடும் தென்றல் என்னோடு பேசுதம்மா' என்பன போன்று செய்யுள் அமைப்பு விதியை நிறைவு செய்யும் அசைநிலையாக வருகிறது. இதனையே தொல்காப்பியம், நன்னூல் முதலான இலக்கண நூல்கள் அம்ம என்னும் சொல் அம்மா என நீண்டு வருதலையும் அது கேட்பித்தல் பொருளிலும் அசைநிலையாகவும் வழங்குதலையும் விவரிக்கின்றன.

அம்ம என்னும் சொல் அம்மா என்று நீண்டு அமையும்போது, அது அம்மை (தாய்) என்னும் முறைப்பெயர்ச் சொல்லின் விளி ஏற்கும் வடிவம் அன்று; அது ஓர் இடைச்சொல்லே என்னும் தம் கருத்தை வலியுறுத்தும் பொருட்டுத் தொல்காப்பியம் அம்முறைப் பெயரொடு சிவணாதாயினும் என்று குறிப்பிடுகிறார். இந்தக் குறிப்பினைப் புரிந்து கொண்டு உரையாசிரியர்களும் 'அம்மா கொற்றா,' 'அம்மா சாத்த' என்பவற்றைச் சான்று காட்டுகின்றனர்.

அம்மையைக் (தாயைக்) கேட்பிக்கும் பொருட்டு விளிப்பதாயின், கொற்றா, சாத்த என்னும் ஆண்பாற் பெயர்கள் அதனைத் தொடரா. கேட்பித்தற்குரிய பெயர்கள் அம்மை அல்ல; அவை ஆடவர்களைக் குறிப்பன. எனவே அம்மா, அம்ம என்னும் சொற்கள் அவற்றோடு பொருள் தொடர்புக்கு உரிய கொற்றன், சாத்தன் என்னும் பெயர்களோடு பால் இயைபு அற்றவை. ஆதலால் அம்ம, அம்மா என்பன அம்மை என்னும் முறைப் பெயரிலிருந்து வடிவமாற்றம் பெற்றவை அல்ல. பிறிதோர் வகையைச் சார்ந்தவை – *இடைச்சொல் வகையைச் சார்ந்தவை.* இவ்வாறு இலக்கண நூல்கள் கருதுகின்றன.

அம்ம, அம்மா என்பன உண்மையில் (originally) அம்மை என்னும் முறைப் பெயரின் வடிவ மாற்றங்களே. இச்சொற்கள் முறைப் பொருண்மையை இழந்து, கேட்பித்தல் பொருளிலும், அசைநிலையாகவும் வழங்கியமையால், இவற்றை இலக்கண நூல்கள் இடைச் சொற்கள் என்று கருதலாயின. இத்தகைய கருத்து தொல்காப்பியத்திற்கு முன்னரே உருவாகி விட்டது *எனலாம். முந்தைய* இலக்கண நெறிகளைப் பின்பற்றி விதிகளைக் கூறுதலை முதன்மை நெறியாகக் கொண்டமையால் தொல்காப்பியம் முதலிய மரபிலக்கண நூல்களிலும் இக்கருத்து இடம் பெற்றுவிட்டது.

தொன்மையான அகராதிப் பொருளை இழந்து உணர்ச்சிப் பொருளை உணர்த்தும் பெயர், வினைச் சொற்களையும் வடிவம்

சிதைந்து மருவி வழங்கும் பெயர், வினைச் சொற்களையும் இடைச் சொற்களாகக் கூறுதல் தமிழ் மரபிலக்கணக் கொள்கைகளுள் ஒன்றாகும். கண்டீர், கொண்டீர், சென்றது, போயிற்று, கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்னும் சொற்களை இக்கொள்கை பற்றியே தொல்காப்பியம் எச்சவியலில் அசைநிலை இடைச்சொற்கள் என்று கூறுகிறது. போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று என்பவற்றை நன்னூல் முதலியன அசைநிலைச் சொற்கள் என்று கூறுகின்றன. இவற்றுள் தாம், தான் என்பன படர்க்கைப் பெயர்ச் சொற்கள். ஏனையவை வினைச் சொற்கள்—தற்காலத்தில் இவை துணை வினைகள் (auxiliary verbs) என்று கூறப்படுகின்றன.

அம்மா என்னும் சொல் பெண்களின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு வழங்கப்படுகிறது. இச்சொல் 'ஏ' என்னும் ஒட்டுச்சொல்லுடன் இணைந்து, ஏயம்மா என்றும் ஏம்மா (ஏ+அம்மா ஏயம்மா ஏம்மா) என்றும் வழங்கப்படுகிறது.

அம்மை என்னும் முறைப் பெயர் வடிவமாற்றத்துடன் கேட்பிக்கும் பொருளில் மகளிர்க்கு வழங்குதலைப் போன்று, அப்பன் அய்யன், அக்கை, பிள்ளை போன்ற முறைப்பெயர்களும் வழங்குகின்றன. இச்சொற்கள் யாவும் ஏ என்னும் ஒட்டுச் சொல்லுடன் இணைந்து வழங்கப்படுதலே தற்காலத்தில் பெருவழக்காகும். ஏயப்பா, ஏப்பா, எம்பா என்பன அப்பன் என்னும் சொல்லிலிருந்து உருவானவை. ஏ+அப்பாஏப்பா என்பது ஏம்பா என ஒலிநயத்திற்காக மெல்லொலி பெற்றுள்ளது. ஏயய்யா என்பது ஏய்யா என்று வழங்கப்படுகிறது. அப்பன், அய்யன் என்னும் இரண்டும் தந்தை என்னும் முறைப் பொருளை இழந்து ஆடவர்களைக் கேட்பித்தற்காக வருகின்றன. அக்கை என்பது ஏக்கா (ஏ+அக்கா) என்றும் ஏக்கி என்றும் மகளிரைக் கேட்பித்தற்கு வருகிறது. நெல்லை, தூத்துக்குடி மாவட்டப் பகுதிகளில் ஏக்கி என்னும் சொல் யாதவர், மறவர், பரதவர் முதலிய சில இனத்தவரிடமும் ஏக்கா என்பது யாவரிடமும் காணப்படுகின்றன.

ஏப்பிள்ளை என்பது ஏப்பிள்ள, ஏப்பிள்ளா என்று வடிவமாற்றத்துடனும் மகளிரிடையே வழக்கிலுள்ளது. முறைப்பெயர்களைக் கேட்பித்தற் பொருளில் வழங்குமிடத்து பேசுவோர், கேட்பவர் எனும் இருவரிடமும் அன்புகனிந்த நெருக்கமும் மதிப்பும் வெளிப்படுதலை அறியலாம்.

**எல்லே**

அம்ம முதலிய சொற்கள் கேட்பித்தற் பொருளில் வழங்குதலில் அவற்றின் தொல்வடிவம் முறைப்பெயர் என்பதனை அறிதற்குச் சொல்லமைப்பில் இடமுளது. ஆனால் சில சொற்களின் முந்தைய வடிவத்தினை அறிய இயலவில்லை. அவற்றின் அமைப்பு சிதைந்து மருவியதைப் போன்று காணப்படுகிறது.

எல்லே என்னும் சொல் குறித்த நூற்பா ஒன்று தொல்காப்பிய இடையியலில் உளது. இதற்கு வெவ்வேறாகச் சில பாடவேறுபாடுகள் கூறப்படுகின்றன. எல்லே விளக்கம் என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். எல்லே இலக்கம் என்று கொண்டு, சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் விளக்குகின்றனர். எல்லே இரக்கம் என்றொரு பாடம் இருப்பதாகக் கந்தசாமி, தேவநேயப் பாவணரும் எல்லே விளிக்கும் என்றொரு பாடம் இருப்பதாக அடிகளாசிரியரும் தத்தமது உரைக்குறிப்பில் தெரிவிக்கின்றனர். எல் என்னும் அடிச்சொல் ஒளிருதல் என்னும் பொருளில் சங்க இலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளது. ஒளிருதல் என்னும் பொருள் அடிச்சொல்லுக்குரிய அகராதிப் பொருளாகும். அவ்வாறாயின், இச்சொல்லைத் தொல்காப்பியம் உரியியலில் விளக்கியிருத்தல் வேண்டும். நேமிநாதம் இதனை எல்லும் விளக்கம் என்று உரிச்சொல் மரபிலேயே அடக்கியுளது. தொல்காப்பியம் எல்லே என்னும் சொல்லை ஓர் இடைச் சொல்லாகக் கொண்டு விளக்குகிறது. எனவே ஒளிருதல் என்னும் பொருளுக்கு இணையான இலக்கம், விளக்கம் என்னும் பாடங்கள் ஏற்புடையன ஆகா. இடைச்சொற்களின் பொருளாகிய உணர்ச்சி, இலக்கணம் போன்ற

சார்புப் பொருளாக விளிக்கும், இரக்கம் என்பன உள்ளன. அவற்றுள்ளும் சங்கப் பாடல்களிலும் பிற்காலப் பாடல்களிலும் பேச்சு வழக்குகளிலும் விளித்தற்பொருளுக்கு இணையான கேட்பித்தற் பொருளிலேயே எல்லே என்ற சொல்லும் அதனுடன் தொடர்புடைய சொற்களும் பெரு வழக்கில் இடம்பெற்றுள்ளன. எனவே 'எல்லே விளிக்கும்' என்ற பாடத்தையே தொல்காப்பியத்தின் உண்மையான நூற்பா வடிவமாகக் கொள்ள வேண்டும்.

எல்லே, எல்ல, எல, எல்லா, ஏலாஅ, ஏலே, ஏல, லே என்னும் சொற்கள் கேட்பித்தற் பொருளில் வழங்கப்படுகின்றன. இவையாவும் 'எல்' என்னும் ஒரே அடிச்சொல்லிலிருந்து உருவானவையாகும்.

எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ
(திருப்பாவை)

எல்லே ஈதென்ன இளமை எம்மனைமார் காணிலொட்டார்
(நாச்சியார் திருமொழி)

திருப்பாவையில் ஒருத்தி துயின்று கொண்டிருக்கும் தோழியைத் துயிலெழுப்புகிறாள். நாச்சியார் திருமொழியில் தமது துகிலைக் கைப்பற்றி வைத்துள்ள கண்ணனிடம் ஆயர் கன்னியர் கெஞ்சுகின்றனர்.

அவற்றைத் தருமாறு எல்லே என்னும் சொல் ஆண், பெண் வேறுபாடின்றி யாவரையும் கேட்பித்தற்காக வருதலை இங்குக் காண முடிகிறது.

எல்ல என்னும் சொல் அகநானூற்றில் தோழியர் உரையாடலில் இடம்பெற்றுள்ளது.

'கேளாய் எல்ல தோழி'

எல்லா என்னும் சொல் ஆண், பெண் பால் வேறுபாடின்றி இலக்கியங்களில் கேட்பித்தற் பொருளில் வருகிறது.

'எல்லா இஃது ஒத்தன் என்பெறான்'

கலித்தொகையில் தோழி தலைவியிடம் இவ்வாறு பேசுகிறாள்.

'எல்லா நீ முன்னத்தான் ஒன்று குறித்தாய்போல் காட்டினை
நின்னின் விடாஅ நிழல்போல் திரிதருவாய்'

தோழி தலைவனை விளித்துப் பேசுதலாக அமைந்த கலித்தொகைப் பாடல் இது.

"எல்லா யாம் பெற்றேம்"

இவ்வாறு நல்லந்துவனார் பரிபாடலில் கேட்பித்தற் சொல்லைக் கையாண்டுள்ளார்.

சிலப்பதிகாரத் துன்பமாலையில் 'எல்லா ஓ' என்னும் சொற்கள் கேட்பித்தற் பொருளில் வருகின்றன. கண்ணகி மகளிரை நோக்கிப் பேசுமிடமிது. இங்கு எல்லா, ஓ என்னும் இரு சொற்களும் இரட்டையாக விளித்தற் பொருளில் வருகின்றன. ஒரே பொருளை உடைய சொற்கள் அடுக்கிக் கேட்பித்தற் பொருளில் வருதல் தமிழில் பரவலான ஓர் வழக்காகும்.

தோழி ஒருத்தி தலைவனிடம் உரையாடுமிடத்து ஏலா, ஏலாஅ என்னும் சொற்களைப் பயன்படுத்துகிறாள்.

குறவன் மகள் "ஆணை கூறு ஏலா கூறேல்" (பரிபாடல்)

"என்பாணி நில்நில் ஏலாஅ பாணி நீ நின் சூள்" (பரிபாடல்)

ஏலே, ஏல, லே என்னும் சொற்கள் தற்காலப் பேச்சுத் தமிழில் தென்மாவட்டப் பகுதிகளில் வழங்கப்படுகின்றன. இவை ஒத்த வயதினரிடமும் குறைந்த வயதினரிடமும் உள்ள நெருக்கம், கனிவு காரணமாகப் பயன்படுத்தப்படுகின்றன. தவிர, சினம் காரணமாக மதிப்பைக் குறைக்கும் நோக்கில் பயன்படுத்துதலும் இப்பகுதியினரிடம் காணப்படுகிறது.

தற்காலத்தில் ஏலே, ஏல, லே என்பன ஆடவரிடம் பெருவழக்கில் உள்ளன. மகளிரிடம் நெருக்கமும் அன்பும் மிகுதி காரணமாக இச்சொற்களைப் பயன்படுத்தும் வழக்கும் மிக அரிதாகக் காணப்படுகிறது.

எல் என்னும் அடிச்சொல்லிலிருந்து உருவான சொற்கள் விளித்தற் பொருளில் வழங்குதலைத் தொல்காப்பிய விளக்கங்களிலும் இலக்கியங்களிலும் அறிய முடிகிறது. அவை எல்லாவற்றிலும் இச்சொற்கள் இடைச் சொற்களாக வருகின்றன. எனினும் இவற்றின் தொன்மை வடிவம் ஒரு பெயராக இருக்கலாம் என்று கருத இடமுளது.

'எல்' என்ற சொல்லின் அடியாக அமைந்த எலுவன் என்னும் பெயர்ச் சொல் தோழன் என்னும் பொருளில் ஓர் வட்டாரப் பேச்சு மொழியில் வழங்கியதை மயிலை நாதர் உரை (நன்னூல் 272) தெரிவிக்கிறது. 'சீத நாட்டார் தோழனை எலுவனென்றும் வழங்குவர்' என்பதே அவ்வுரைப் பகுதி. இதற்கு இணையான ஒரு சான்றினை நச்சினார்க்கினியர் (தொல், சொல் 400), 'சீத நாட்டார் ஏடாவென்பதனை எலுவனென்றும் வழங்குப' என்று குறிப்பிடுகிறார். இரு உரையாசிரியர்களின் செய்திகளிலிருந்து தோழன், எலுவன், ஏடா என்னும் மூன்றும் ஒரே பொருளைக் கொண்ட சொற்களாகும் என்பது புலனாகிறது. தவிர, எலுவன், எலுவ என்னும் சொற்கள் கேட்பித்தற் பொருளில் வழங்கிய செய்தியையும் அறியமுடிகிறது.

### ஏடா

ஏடா என்பது ஏடன் என்ற சொல்லிலிருந்து உருவானதாகும். சேடன் என்பது சகர இழப்புடன் ஏடன் என்றாகியுளது. சேடன் என்பதற்குத் தோழன் என்பது பொருள். இச்சொல் சேட்டன் என்று மலையாளத்தில் உறவுப் பொருளுடன் வழங்கப்படுகிறது. சேடன் என்ற சொல்லில் டகரம் ஒலிப்புடை ஒலியாக (d) உளது. இதன் தொல்வடிவம் ஒலிப்பில்லா ஒலி (t) ஆகும். மலையாளத்தில் ஒலிப்பில்லா ஒலியுடன் அமைந்த சொல் வழக்கிலுளது.

ஏடா என்னும் சொல் கேட்பித்தற்பொருளில் இலக்கியங்களில் இடம் பெற்றுளது.

"ஏடா நினக்குத் தவறுண்டோ" (கலித்தொகை)

"ஏடா குறைவுற்று நீயெம் உரையல்" (கலித்தொகை)

*மருதக் கலித் தலைவி தன் தலைவனை நோக்கி 'ஏடா' என்று உரைக்கிறாள்.*

*மணிமேகலைக் காப்பியத்தில்* வருந்திய நெஞ்சத்துடன் தன் ஆலயத்தில் படுத்திருந்த ஆபுத்திரனை நோக்கிச் சிந்தாதேவி, 'ஏடா அழியல் எழுந்திது கொள்ளாய்' என்று கூறி அமுத சுரபியைக் கொடுக்கிறாள்.

ஏடா என்னும் சொல்லே தமிழகத்தில் பெரு வழக்கிலுள்ள கேட்பித்தற் சொல்லாகும். இதுவும் நெருக்கமும் கனிவும் உடையோரால் பயன்படுத்தப்படுகிறது. தனக்கு ஒத்தவரிடமும் தாழ்ந்தவரிடமும் இச்சொல் கூறப்படுகிறது. ஆடவர்க்கே உரிய இச்சொல்லை அன்பும் நெருக்கமும் உடைய தோழியரும் உறவினருமான மகளிர் அரிதாக வழங்குகின்றனர்.

டேய், டே ஏண்டா, ஏடே என்னும் சொற்களும் ஏடா என்ற சொல்லைப் போன்ற வழக்கினை உடையவை. இவை ஏடா என்ற சொல்லுடன் அமைப்பளவிலும் பொருளளவிலும் தொடர்புடையன.

நெல்லைமாவட்டம் பண்ணையூர் செட்டிகுளம் (கூடங்குளம் அருகிலுள்ளது) என்னும் ஊரில் அரிய வழக்கு ஒன்று காணப்படுகிறது. மகளிர் ஒருவரைப் பிறிதொருவர் விளித்துப் பேசுமிடத்து 'ஏட்ட' என்ற சொல்லைக் கையாள்கின்றனர்.

**ஏடி**

ஏடா என்னும் சொல்லுக்கு இணையானதாக மகளிர் தமக்குள் ஏடி என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். இச்சொல் ஏட்டி, ஏடீ, டீ என வடிவமாற்றத்துடன் வழங்கப்படுகிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் தெய்வச் சிலையார் (தொல்,சொல்.149), 'அம்மா கொற்றா எனவரும். வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனால், ஏட, ஏடா ஏடி, ஏடீ என வருவனவுங் கொள்க என்று குறிப்பிடுகிறார்.

ஏடி என்னும் சொல்லைக் கேட்பித்தற் பொருளில் பெரியாழ்வார் திருமொழியில் வழங்கியுள்ளார்.

"ஏடிவந்து காணாய்"

ஆநிரைகளை மேய்க்கிற கண்ணபிரானின் பேரழகினைக் கண்டு மகிழுமாறு கன்னி ஒருத்தி தம் தோழியரை நோக்கி இவ்வாறு பேசுகிறாள்.

தற்கால மகளிர் பேச்சு வழக்கில் மிகப்பெரும்பான்மையாக இச்சொல்லே கேட்பித்தற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இளைஞர்கள் மிக அரிதாகத் தம் தோழர்களிடம் கேலியாக இச்சொல்லைப் பயன்படுத்துதலும் காணப்படுகிறது.

ஏடி என்ற சொல்லை ஏண்டி என்று வழங்குதலும் அவ்வப்போது உரையாடலில் இடம்பெறுகிறது.

ஏடி என்ற சொல் சேடி என்ற சொல்லுடன் தொடர்புடையது. தோழி என்னும் பொருளுடைய சேடி என்பதன் மொழிமுதற் சகரம் ஏடி என்பதில் மறைந்துவிட்டது.

***யாழ***

நன்னூல் முதலான பிற்கால இலக்கண நூல்கள் 'யாழ' என்னும் சொல்லை 'முன்னிலையசை' என்று கூறுகின்றன. இச்சொல்லுடன் தொடர்புடைய ஏழா, ஏளா என்பன கேட்பித்தற் பொருளில் மகளிரிடையே தென்மாவட்டங்களில் வழக்கிலுள்ளது. இச்சொல் முப்பதாண்டுகளுக்கு முன்னர் வழங்கியதை விடவும் தற்காலத்தில் அருகிக் காணப்படுகிறது. இதன் இடத்தை ஏடி என்பது கைப்பற்றியுளது.

**ஏ, ஓ**

ஏ, ஓ என்னும் சொற்களும் இவற்றின் வடிவமாற்றங்களான யே,யோ, யோவ் என்பனவும் கேட்பித்தற் பொருளில் வழங்கப்படுகின்றன. இச்சொற்கள் மதிப்புக் குறைந்த உணர்வில் பயன்படுத்தப்படுவன. கணவன்மார் மனைவிமாரை ஏ, யே என்று அழைக்கும் வழக்கம் தற்காலத்தில் அருகி வருகிறது.

ஏ, ஓ என்பன கேட்பித்தற் பொருளில் வழங்கியதை நப்பண்ணனார் 'ஏஎ ஓஒ' என விளி எற்பிக்க 'என்று பரிபாடலில்' பாடுகிறார்.

**ஏங்க, ஏனுங்க**

ஏங்க, ஏனுங்க என்னும் சொற்கள் மதிப்புடைய கேட்பித்தற் சொற்களாகும். மனைவி கணவனை இச்சொற்களால் அழைத்தல் பெருவழக்காகும். கணவனது பெயரைக் கூறுதல் இழிவான செயல் என்ற நம்பிக்கை காரணமாக இச்சொல் வழக்கு மகளிரிடம் பெருவழக்காகியுளது. கோவை மாவட்ட மக்களிடம் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி இச்சொல் வழக்கினைக் காணலாம்.

'கேட்பித்தல்' இடைச் சொற்கள் தனித்து மட்டுமன்றி, விளிப்பெயருக்கு முன்னர் (ஏ இராமா, ஏதம்பி, அம்மா தமிழரசி) என்று இணைந்து வருதலும் உண்டு. முறைப்பெயர்கள் கேட்பித்தற் பொருளில் வருதலால் நெருக்கமும் கனிவும் அமைந்து கேட்பவரின் கவனத்தை இனிய மனநிலையில் ஈர்க்கமுடிகிறது.

# வீரமாமுனிவரின் குறிப்பு வினை

சி. சொர்ண மாலா,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
கோவிந்தம்மாள் ஆதித்தனார்
மகளிர் கல்லூரி,
திருச்செந்தூர்.

வீரமாமுனிவர் குறிப்பு வினையைத் தொன்னூல் விளக்கத்தில் வினைக்குறிப்பு (Defective Verbs) என்றும் செந்தமிழ் இலக்கணத்தில் பகுபதப்பெயர் (Appellative Nouns) என்றும் குறிப்பிடுகிறார்.

**வரைவிலக்கணம்**

வீரமாமுனிவர் தொன்னூல் விளக்க நூற்பாவில் (123)

"வினைக்குறிப்பென்ப வினை போல் விகுதி
பெற்றிடம் பாற்கும் பெயர்ப்பகு பதமே"

என்று வினைக்குறிப்புக்கு விளக்கம் தருகிறார். மேலும் நூற்பாவின் உரையில்,

(இ—ள்) வினைக் குறிப்பாமா றுணர்த்து தும்
மேலே பெயர்ப்பகுபதங்களை விளக்கிய விடத்தில்
அவையெலா மற்றைப் பெயர்களைப்
போலே வேற்றுமை யுருபு பெறுவன வன்றியே
வினையைப் போல நடப்பனவா மென்பதாயிற்று
அங்ஙன நடப்புழி வினைக்குறிப் பெனப்படும்
இவையே பெயரியலிசைத்த சொல்லாயினும்
வினையின் றொழிலைக் குறிப்பனவும்
வினையைப் போல நடப்பனவு மாகையில்
வினையை விளக்கியவிடத்து வந்த முறையெனக்

காண்க. வினைக் குறிப்பெல்லா மூவிடத்தைம்
பால் வினைச் சொற்கேற்ற விகுதியைப்
பெற்று முடியும் (உ–ம்) பூணினேன்–யான்,
பூணினேம்–யாம், பூணினை–நீ,
பூணினீர்–நீர், பூணினான் – அவன்,
பூணினாள்–அவள், பூணினார்–அவர்,
பூணிற்று–அது, பூணின–அவை,
என வரும். பொருண் முதலாறு
காரணங்களால் வரும் பெயர்ப்பகுபத
மெல்லாம் வினைக்குறிப்பாக நடப்பன
வாமெனக் கொள்க. என்று கூறுகிறார்.

வேறு எந்த மொழியிலும் காணப்படாத ஒரு வகைச் சிறப்புச் சொற்கள் இந்த மொழியில் காணப்படுகிறது. அச்சொல் பெயர்ச் சொற்களைப் போன்று வேற்றுமை உருபுகளை ஏற்றும் வினைச் சொற்களைப் போன்று மூவிடப்பால் விகுதிகளை ஏற்றும் வருகிறது. இவை வினைக்குறிப்பு (the sign of the Verb) என்று கூறப்படுகின்றன.

சில செயலையோ உணர்ச்சியையோ இச்சொற்கள் விவரிக்கின்றன. அதாவது இவை வினைச்சொல்லைப் போலச் செயலாற்றும் பெயர்ச் சொற்களாகும் (nouns serving, like a Verb, to express some actions or passion) என்று முனிவர் செந்தமிழ் இலக்கணத்தில் (V.50) விவரிக்கிறார்.

குறிப்பு வினைச் சொற்கள் பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என்னும் அறுவகைப் பெயர்ச் சொற்களைப் பகுதிகளாகக் கொண்டு மூவிடம் பால் விகுதிகளைப் பெற்று அமையும் என்பது வீரமாமுனிவரது கருத்தாகும். இது நன்னூலின் (320).

"பொருள் முதலாறினும் தோற்றிமுன் ஆறனுள்
*வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே"*

என்னும் கருத்தைத் தழுவியதாகும். அமைப்பளவில் பெயராகவும் செயற்பாட்டில் வினையாகவும் குறிப்பு வினைகள் உள்ளன என்பது வீரமாமுனிவரின் கொள்கையாகும்.

இராபர்ட் கால்டுவெல், 'பெயர் அல்லது பெயரடை பால், எண் விகுதிகளுடன் இணைந்து வினைகளாக மாறுதல் பழைய திராவிட மொழிகளில் காணப்படுகிறது. தமிழ் இலக்கண அறிஞர்கள் இவற்றை வினைக்குறிப்பு (Literally verb signs) எனக் கூறுகின்றனர். பெஸ்கி Appellative Verbs or Conjugated appellatives *என நான் கருதுகிறேன் என்று கூறுகிறார்'*, என *விளக்கம் தருகிறார்.*(A Comparative Grammar of the Dravidian or South-Indian family of Languages, pages - 477, 478)

'குறிப்பு வினைகள் உண்மையில் (originally) வினையாலணையும் பெயர்களே. அவை பின்னாளில் பயனிலைகளாகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி (History of Grammatical theories in Tamil and their Relation to Grammatical Literatures in Sanskrit, P. 145) கூறுகிறார்.

பெரும்பான்மையான பெயர்ச்சொற்கள் பால்–எண் விகுதிகளை ஏற்றல் இல்லை. ஆனால் குறிப்பு வினைகள் இவ்விகுதிகளை எற்கின்றன. முந்தைய காலத்தில் தமிழ்ப் பெயர்கள் விகுதிகளை ஏற்காதும் வினைச்சொற்கள் எற்றும் வரும் என்னும் மொழிமரபு முழுமையாக இருந்திருத்தல் வேண்டும். நாளடைவில் சில பெயர்கள் பால்–எண் விகுதிகளை ஏற்றுப் பயனிலையாகவும் பயன்படுத்தப்படலாயின. இந்நிலையில் இவை

வினைகளாகக் கருதப்படலாயின. எனினும் வினைக்குரிய செயல், காலம் இரண்டும் அமைப்பளவில் இல்லாததால் அவை குறிப்பாக உணர்த்தப்படுகின்றன என கற்பிக்கப்பட்டு, வினைக்குறிப்பு (வினையல்ல; வினையின் குறிப்பு) என்று பெயரிடப்பட்டிருக்க வேண்டும். தொல்காப்பியம் குறிப்பு என்றும் நன்னூல் வினைக்குறிப்பு, குறிப்பு என்ற பெயர்களையுமே பெரிதும் பயன்படுத்தியுள்ளன. பின்னாளிலேயே குறிப்பு வினை என்னும் பெயராட்சி வலுவடைந்துள்ளது (பெ.சுயம்பு, தமிழ்மொழி அமைப்பும், வரலாறும் ப.199).

மு. வரதராசன் குறிப்பு வினைச்சொற்கள் வினையடியாகப் பிறவாமல் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் *என்னும் அறுவகைப் பெயரடியாகப் பிறப்பன எனவும்* பெயர்ச்சொற்கள் பயனிலையாகச் செயலாற்றுங்கால் குறிப்புவினைகள் *என்று கொள்ளப்படுகின்றன எனவும்* கூறுகின்றார்.

ஆ.வேலுப்பிள்ளை எழுவாயாக அல்லது செயப்படுபொருளாக வரும்போது பெயரெனப்படும் சொற்கள் பல பயனிலையாக வரும்போது குறிப்பு வினைமுற்றுக்கள் எனப்படுகின்றன என்று கூறுகின்றார்.

***குறிப்பு வினைமுற்று***

தொன்னூல் விளக்கம் (124) தெரிநிலை வினை முற்றுக்கள் ஏற்கும் பால் விகுதிகளைக் குறிப்பு வினைமுற்றுக்களும் ஏற்கும் என்று குறிப்பிடுகிறது. மேலும் இச்சொற்கள் வேற்றுமைப் பொருளில் அமையும் என்பதையும் குறிப்பிடுகிறது.

எ—டு

| | | |
|---|---|---|
| வில்லினன் | = | வில்லை உடையவன் |
| தீமைத்து | = | தீமையைக் கொண்டது |
| கடற்று | = | கடலிலுள்ளது |
| மாரிநாட்டு | = | மாரி நாளிலாயது |
| இருட்டு | – | இருளை உடையது |

*வினைக் குறிப்பெச்சம்*

வீரமாமுனிவர் குறிப்புப் பெயரெச்சத்தையும் குறிப்பு வினையெச்சத்தையும் வினைக் குறிப்பெச்சம் என்று குறிப்பிடுகிறார்.

பெயரெச்சம் போலவும், அடைமொழி போலவும் மற்றொரு பெயரைச் சார்ந்து வருங்கால் மூவிடத்தைம்பாலிற்குப் பொதுவாய் நிற்கும் வினைக் குறிப்பெச்சம் எனப்படும் என்று உரையில் (125) குறிப்பிடுகிறார்.

எ—டு

சுனைய மலர்

அரிய குணத்தவன்

கொடிய சொல்லன்

குறிப்புப் பெயரெச்சமும் குறிப்பு வினையெச்சமும் பெயரடையாகவும் (adjectives) வினையடையாகவும் (adverbs) வருகின்றன. எனவே வீரமாமுனிவர் இவற்றை அடைமொழிகள் என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு கூறுதல் மேலைநாட்டு மொழி மரபாகும்.

# குமரகுருபரரின் கற்பனையில் தமிழ்

உ. கருப்பத்தேவன்,
பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை–21.

## முன்னுரை

குமரகுருபரரின் கற்பனைப் பார்வையில் அவரது படைப்புக்களில் தமிழ் மொழி பற்றிய சிந்தனை இடம்பெற்றுள்ள பாங்கினை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## *குடிப்பெருமையும் மொழிப்பெருமையும்*

உலகத்தில் தமிழனுக்குக் குடிபெருமையும் மொழிப் பெருமையும் தொன்மையானதாகும். 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி' என்பது தமிழனின் குடிப்பெருமையைச் சுட்டும்.

*" ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி*
*எங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்–ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி செங்கதிரோன் ஏனையது*
*தன்னேர் இல்லாத தமிழ் "*

என்னும் தண்டியலங்கார மேற்கோள் செய்யுள் தமிழ்மொழியின் பெருமையைச் சுட்டும். இவ்விரு கருத்தும் சங்க காலம் முதல் இக்காலம் வரையில் நிலவுகின்றது. இலக்கிய இலக்கண, வரலாற்று நூல்கள் இக்கருத்திற்குச் சான்றுகளாக உள்ளன.

குமரகுருபரர் வேற்றவர் ஆட்சியின் கீழ் தமிழகமும் இந்தியாவும் அடிமைப்பட்டிருந்த காலத்தில் தோன்றி வாழ்ந்தவர். தமிழும் சைவமும் தழைக்கப் பாடுபட்டவர் அதற்கு அவருடைய மொழிப்புலமை சமயத்திற்கும் சமுதாய உணர்வுக்கும் ஊடுபாவாக அமைந்திருந்தது. அவர் வாழ்ந்த கி.பி.17ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வடமொழி ஆதிக்கம் மிகுதி. அப்போது திருச்சி, தஞ்சை, மதுரைப் பகுதிகளை ஆண்ட நாயக்க மன்னர்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட ஆந்திரர்கள். அவர்கள் வடமொழி மீது பெரும் பற்றுக்கொண்டவர்கள். இச்சூழலில் தமிழ்ப்புலவர்கள் வாய்ப்புக்கிட்டிய போதெல்லாம் தமிழ்மொழியைப் போற்றிப் பாடினர். இருப்பினும் வடமொழியையும் அவர்கள் போற்ற வேண்டிய நிலை இருந்தது. குமரகுருபரர்க்கு முன்னர் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் கூட வடமொழியை ஓரளவிற்குப் பாராட்டிய பின்னர்தான் தமிழைப் பெரிதும் புகழ்ந்து பாடியுள்ளார். இதற்குக் காரணம் நாயக்க மன்னர்களின் ஆட்சியும் அவர்களது வடமொழிப்பற்றுமே ஆகும்.

நாயக்க மன்னர்களும் அவர்களைச் சூழ்ந்து ஆட்சிக்கு உதவிய அமைச்சர்களும் அறிஞர்களும் வடமொழி ஆர்வலர்களே ஆவர். தமிழர்கள் வாழும் தமிழ் நிலம் அவர்கள் ஆட்சியில் இருந்தது. ஆதலின் வடமொழிக்கு வாழ்த்துக் கூறுபவர்களே வையத்தில் வாழ இயலும். வளம் வாய்ந்த தமிழ்க்கலையை நுகரவும் முடியும். இதுவே அக்காலச் சூழ்நிலை. இதனால் வடமொழிக்கு வாகை பாடினாலன்றி வண்டமிழ்ப் புலவர்கள் வாழ இயலாத நிலை இருந்தது. பரஞ்சோதி முனிவர் இக்காலச் சூழலிலே வாழ்ந்தவர். ஆதலின் அவர் வடமொழியையும் தென்மொழியையும் வளமாகவே அவர் கற்றிருந்தார். வாய்ப்பு நேரும் இடங்களில் இருமொழிகளையுமே ஏற்றிப் போற்றினார். ஆயினும் பரஞ்சோதியார் நெஞ்சிலே பைந்தமிழ்ப் பற்று நிறைந்திருந்தது என்னும் கோ.வே.பெருமாளின் இக்கருத்து குமரகுருபரர் வாழ்ந்த காலத்திற்கும் பொருந்தும்.

*"நுண்பொருளாகத் தமிழைக் கற்பனை செய்தல்"*

தமிழுக்கு நுண்பொருள் தன்மைகளை ஏற்றிக் குமரகுருபரர் பல இடங்களில் பாடியுள்ளார். 'தென்னந்தமிழின் உடன்பிறந்த சிறுகால்' 'மதுரித்துட்டெழு முத்தமிழ்', 'தேக்குமிழ் மதுரமொழுகிய தமிழ்', 'பண்ணுளம் வடிதமிழ்', 'புத்தமுதம் வழிந்தொழுகு தீந்தமிழ்', *'தருசுவை யமுதெழ மதுரம தொழுகு பசுந்தமிழ்' 'தண்டமிழ் மதுரம்'* 'இழுமென்மொழித் தெளிதமிழ்', 'அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது சொற்சுவைப் பழுத்த தொகைத் தமிழ்', 'கலைத்தமிழ்', 'தீம் பாலமுதம்', 'ஒள்ளொளி ததும்பும் ஒண்டமிழ்', 'தலைச் சங்கம் பொங்கும் பண் முத்தமிழ்' எனக் குளிர்ச்சி, இனிமை, ஒளி, தெளிவு முதலிய பண்புகளுடைய நுண்பொருளாக அவர் தமிழைக் கற்பனை செய்து பாடியுள்ளார். மீனாட்சியம்மைபிள்ளைத் தமிழில் அவர் இவ்வாறு தமிழைப் போற்றியுள்ளார்.

"தென்னந்தமிழின் உடன்பிறந்த சிறுகால்" எனத் தென்றலின் மென்மை, மணம் முதலியவற்றைக் கருதித் தமிழைத் தென்றலுடன் உடன்பிறந்ததாகப் பாடியுள்ளார். தமிழும் தென்றலும் பிறந்த இடம் பொதிகையாதலால் இவற்றை ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகளாகக் கற்பனை செய்துள்ளார். உலகத் தோற்றத்தில் நெருப்பு, நீர், காற்று முதலியன தோன்றிப் பின்னர் படிப்படியாக உயிரினங்கள் தோன்றி அதன்பின்னர் மொழியேற்பட்டதென்பர். நாத தத்துவத்திலிருந்து மொழி தோன்றியது என்பர். ஆனால், குமரகுருபரர் காற்று தோன்றியபோதே தமிழ் தோன்றியது எனத் தமிழின் தொன்மையைச் சுட்டுகின்றார். அவர் தென்றலொடு தமிழ் பிறந்தது எனக் குறிப்பிடாமல், தமிழொடு தென்றல் பிறந்தது எனத் தமிழுக்கு முதன்மை கொடுத்துப் பாடியுள்ள நயம் சுட்டத்தக்கதாகும்.

*இறைவியோடு தமிழை இணைத்துப்பாடுதல்*

குமரகுருபரர் இறைவியோடும் இறைவனோடும் தமிழை இணைத்து உயிரோவியமாகப் பாடியுள்ளார். அவர் மதுரை மீனாட்சியம்மையை,

*"தொடுக்குங் கடவுட் பழம்பாடல்*
*தொடையின் பயனே நறைபழுத்த*
*துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்*
*சுவையே"*

எனத் தமிழ்ச் சுவையோடு இணைத்துப் பாடியுள்ளார். இங்கு வரும் 'பழம் பாடல்' என்பதற்கு உ.வே. சாமிநாதையர் 'வேதம்' எனப் பொருள் கொண்டுள்ளார். இந்நூலுக்கு உரையெழுதிய புன்னைவனநாத முதலியார் தொடுக்கப்படும் தெய்வத்தன்மையுடைய பழைய பாடல்களாகிய மாலையின் பொருளாயிருப்பவள் எனப் பொருள் கொண்டுள்ளார். மறை என்ற சொல்லைக் குமரகுருபரர் வேதம் என்ற பொருளில் மட்டும் கையாளவில்லை. மறை என்ற சொல் பல இடங்களில் தமிழ் மறையாகிய தேவார திருவாசகத்தைக் குறிப்பதாக கா. சுப்பிரமணியபிள்ளை சான்றுகளுடன் நிறுவுகின்றார். குமரகுருபரர், ஈண்டு கடவுட் பழம்பாடல் எனக் குறிப்பிடுவது தேவார, திருவாசகப் பாடல்களையே ஆகும். தேவாரம் பழம்பெருமை வாய்ந்த பக்திப் பாடல்களாக இருப்பதோடு அல்லாமல் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டின் இசை மரபுகளைக் காத்துவரும் பழைய இசைச் செல்வமாகவும் இருந்துவருகின்றது. இவ்வளவு பழமையுடைய இசைச்செல்வம் உலகில் எங்கும் இந்த அளவிற்குக் கிடைக்கவில்லை என மு.வ. குறிப்பிடுவதும் நோக்கத்தக்கதாகும். குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழைப் பாடும்போது வடமொழிப் பயிற்சிபெற்றிருக்கவில்லை. அவர் சிவதீட்சை பெற்றபோதும் வேதமுறைப்படி தீட்சை பெறவில்லை. இவ்வாறு இருபொருள்பட அவர் பாடியமைக்குக் காரணம் வடமொழிப் பற்றாளர்களை அவர் திருப்திப்படுத்துவதற்கே எனலாம். எனவே, தொடுக்குங் கடவுட் பழம்பாடலின் தொடையின் பயனாகவும், துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையாகவும் அங்கயற்கண்ணியாகிய மீனாட்சியம்மை விளங்குகின்றாள். நால்வர் பக்திப் பாடல்களின் பயனாகவும், சங்கத்தமிழ்ப் பாடல்களின் சுவையாகவும் இருக்கின்றாள் என்பதே இதன் பொருள், இதனால், தமிழின் பண்பும் பயனும் கூறப்பட்டது. இவ்வாறு குமரகுருபரர் தமிழ் இன்பத்தை இறைவியாகக் கண்டுள்ளார்.

### *இறைவனோடு தமிழை இணைத்துப்பாடுதல்*

குமரகுருபரர் சிவபெருமானைப் பாடும் இடங்களில் சிவனின் வாய், தோள்–புயம், உள்ளம், உறைவிடங்கள், செயல்

ஆகிய அனைத்தோடும் தமிழை இணைத்துப் பாடுகின்றார். குமரகுருபரர் சிவன் வாயில் தமிழ்ப் பாட்டு ஒலித்துக் கொண்டிருப்பதாகவும் அதுவும் வைதீகப்பாட்டு (பழந்தமிழ் பாட்டு) என்று குறிப்பிட்டு, அவ்வாறு அவன் பாடுவதற்குக் காரணம் அவன் பிரமனாலும் எழுத முடியாத அகத்திணையை—தமிழ் நூலை எழுதியவன் என்றும் பாடியுள்ளார்.

*'பதும முதல்வனும் எழுத வரியதோர்*
*பனுவல் எழுதிய வைதிகப் பாட்டினர்'*

என்பதே அப்பாடற் பகுதியாகும். குமரகுருபரர், மதுரைக் கலம்பகத்தில் இறைவனின் உள்ளத்தை உருக்குகின்றஆற்றல் தமிழுக்கு உண்டு என்னும் பொருளில்,

*'பாட்டுக் குருகுந் தமிழ்ச் சொக்கநாதர்'*

எனப் பாடி, இறைவனைத் தமிழ் சொக்கநாதனாகக் கண்டுள்ளார். இறைவன் உறுப்புக்களோடு தமிழை இணைத்துப் பாடியும் குமரகுருபரர் நெஞ்சம் நிறைவு பெறவில்லை. இறைவனின் முழுவடிவமும் தமிழாகவே, தமிழன் பயனாகவே காட்சி தருவதாகக் கற்பனை செய்து இறைவனைத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னனாகவும் கண்டு பாடுகின்றார்.

*'தலைச்சங்கம், பொங்கும் பண்முகத் தமிழ்க்கோர்*
*பயனே சவுந்தர பாண்டியனே'*

மதுரை தமிழ்ச்சங்கத்தில், தமிழ்பொங்கி வழிந்ததென தண்ணீர்மையைத் தமிழ்மொழிக்கு ஏற்றுகின்றார்.

*முடிவுரை*

தமிழ் அரியணையில் இல்லாத நேரத்தில் சைவ மடங்கள் தமிழையும் சைவத்தையும் வளர்த்தன. இவ்விரு உணர்வினையும் இணைத்துத் திருமூலர்

*'என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே'*

எனப் பாடினார். குட்டித் திருஞான சம்பந்தர் எனப் போற்றப்படும் குமரகுருபரருக்குத் திருஞான சம்பந்தரும் பரஞ்சோதி முனிவரும் வழிகாட்டிகளாக விளங்கினார்கள். அந்தநெறியில் குமரகுருபரர் தமிழையும் இறைவன், இறைவியையும், சைவ சமயத்தையும் இணைத்துப் பாடியுள்ளமையைக் காணுகின்றோம்.

## குறிப்புக்கள்

1. தண்டியலங்காரம், நூற்.49, மேற்கோள் செய்யுள்.
2. கோ.வே. பெருமாள், இறைவன் இன்பத்தமிழன்பு, திருவிளையாடற் சொற்பொழிவு, கழக வெளியீடு, பக்.74–75.
3. குமரகுருபரர், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், தால்.1.
4. மேலது, வருகை 9.
5. மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ், கழக வெளியீடு, 1959, ப.20.
6. கா. சுப்பிரமணியபிள்ளை, குமரகுருபர அடிகள் வரலாறு, ப.78.
7. மு.வ தமிழ் இலக்கிய வரலாறு, ப.104.
8. குமரகுருபரர், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், காப்பு 2.
9. குமரகுருபரர், மதுரைக் கலம்பகம், 80.
10. மேலது, 49.
11. திருமூலர், திருமந்திரம், 81.

*பதிப்பாசிரியர்*

**பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்**

## ஆசிரியர் குழு

*முனைவர். திரு. தமிழண்ணல்*

*பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்*

*டாக்டர் திரு. ந. சேதுராமன்*

*முனைவர். திரு. சுப. அண்ணாமலை*

*முனைவர். திரு. ம.ரா.போ. குருசாமி*

*முனைவர். திரு. அ.அ.மணவாளன்*

*முனைவர் கதிர் மகாதேவன்*

*முனைவர் நா. பாலுசாமி*

*முனைவர் பெ. சுயம்பு*

*முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி*

*இராசா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி*

*முனைவர். திரு. செ. கந்தசாமி*

*முனைவர். திரு. க. சின்னப்பா*

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

# மதுரைத் தமிழ்ச்சங்க

# நூற்றாண்டு மலருக்கு

## தமிழ், தமிழ்ப் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்

மற்றும்

## வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

குறித்த கட்டுரைகள் அனுப்ப

**தொடர்பு முகவரி**


பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை–1.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 1.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,